1975 அக்டோபர் 23]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இரண்டு நோக்கங்களும் நிறைவேறும்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சென்டிரல் டூரிஸ்ட் டிபார்ட்மென்டிடம் நாம் அதிக மான தொகை கேட்டால் கிடைக்கும், ஏனெனில் கொடைக்கானலை ஒரு பெரிய டூரிஸ்ட் சென்டராக ஆக்கவேண்டுமென்று மத்திய அரசிடத்தில் ஒரு திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, நமக்கு ஆகும் செலவில் பெரும் பகுதியை மத்திய சர்க்காரிடத்தி லிருந்து நாம் வாங்கிவிடலாம். இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை பணம் கேட்டு இருக்கிறதா? இல்லையென்றால், இனிமேலாவது அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் இறுதியாக முடிவு செய்யப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப் பினர் சொல்லிய யோசனையைக் கருத்தில் கொண்டு உதவி கேட்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

4. அறிவிப்புகள்.

(அ) அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் மற்ற அலுவல் களை எடுத்துக்கொள்வதற்கு முன், பேரவையின் 55-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் குறித்து பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கீழ்க் கண்ட தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள் :

" This House expresses its want of confidence, in the Ministry headed by Hon. Thiru M. Karunanidhi."

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இருக்கை யில் இல்லாததால், அதை எடுத்துக்கொள்வதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.